குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.92/2020

அ.சா.1

2025–ம் ஆண்டு நவம்பர் 18–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாரியப்பன் | தொழில் | |
| தந்தை பெயர் | சின்னபையன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.48 மணி,

Accused Jayakumar present. Advocate Mr.Dhanakoteeswaran present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் பனங்காட்டில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எனது மகன் வெங்கடேஷ் என்பவர் வேலைக்கு சென்றுவிட்டு, வீட்டிற்கு வந்து சாப்பிட்டுவிட்டு முத்துநாயக்கன்பட்டி செல்வதாகக் கூறி எங்களுக்கு சொந்தமான 1643 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் சென்றார்.

2. பகல் சுமார் 01.30 மணிக்கு எனது மகனுக்கு விபத்து ஏற்பட்டுவிட்டதாக எனக்கு தகவல் கிடைத்தது. நான், விபத்து நடந்த சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது எனது மகனுக்கு காதில் இரத்தம் வந்து கொண்டிருந்தது. காலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. அவரை ஆம்புலன்ஸ் மூலமாக சேலம் கோகுலம் மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தோம். அங்கு அவர் 7 – 8 நாட்கள் சிகிச்சையில் இருந்தார்.

3. அதன்பின்பு மேல்சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். அங்கு 4 நாட்கள் சிகிச்சையில் இருந்து, சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். எங்கள் வீட்டிலிருந்து முத்துநாயக்கன்பட்டி செல்லும் சாலையில் சிவா கார்டன் என்ற

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.18 17:12:40 +0530

இடத்தில் விபத்து நடந்தது. எனது மகன் வெங்கடேஷ் முத்துநாயக்கன்பட்டி நோக்கி சென்றபோது, டாடா ஏசிஇ வாகனம் ஓமலூர் நோக்கி வந்து, என் மகன் மீது மோதிவிட்டதாக சொன்னார்கள். விபத்து ஏற்படுத்திய டாடா ஏசிஇ வாகனத்தின் பதிவெண் மற்றும் அதனை ஓட்டி வந்த நபர் குறித்து விபரங்கள் எனக்கு தெரியாது.

4. எனது மகன் எஸ்.கே.எஸ் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் விசாரணை செய்ய வந்தார்கள். அப்போது, எனது மகன் சுயநினைவின்றி இருந்தார். என்னை விசாரித்து புகார்வாக்குமூலம் பதிவு செய்து என்னிடம் கைரேகை வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது. ( **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

5. எனக்கு படிப்பறிவு இல்லாத காரணத்தினால், கோகுலம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக சொல்லிவிட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

6. நான், சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது எனது மகன் தலையில் தலைக்கவசம் இல்லை என்றால் சரி. போலிசார் விசாரணையின் போது எனது மகனின் இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமத்தை நான் கொடுக்கவில்லை என்றால் சரி. புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரி. நான் தனிப்பட்ட முறையில் புகார்வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரி. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 12.59 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.18 17:12:43 +0530